# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## இயக்கூர்திகள் சட்டங்கள் - நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 - 2023

## மானியக் கோரிக்கை எண். 25

**சா. சி. சிவசங்கர்**
போக்குவரத்துத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | சாலைப் போக்குவரத்தின் முக்கியத்துவம் | 1-2 |
| 2. | போக்குவரத்துத் துறையின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் | 2-5 |
| 3. | நிறுவன அமைப்பு மற்றும் நிருவாக அமைப்பு | 5-9 |
| 4. | சாலையில் ஓடும் வாகனங்களின் விவரம் மற்றும் தமிழ்நாட்டில் அதன் வளர்ச்சி | 9-11 |
| 5. | ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான நடைமுறைகள் | 11-13 |
| 6. | மோட்டார் வாகனங்களுக்கான பதிவுச்சான்றிதழ் வழங்குதல் | 14-15 |
| 6(அ) | தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கை | 15-17 |
| 7. | போக்குவரத்து வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழை பெறுவதற்கான அவசியம் மற்றும் நடைமுறை | 18-19 |
| 8. | மாநில கருவூலத்திற்கான வருவாய் | 19 |

| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 9. | உள் கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் சேவைகளை திறமையாக வழங்குதல் | 20–29 |
| 10. | நவீனமயமாக்குதல் மற்றும் மின் – ஆளுமை நடவடிக்கைகள் | 29–35 |
| 11. | அண்டை மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து வசதியை மேம்படுத்துதல் மாநிலங்களுக்கிடையான போக்குவரத்து ஒப்பந்தங்கள் | 35–37 |
| 12. | பள்ளிப்பேருந்துகளின் இயக்கங்களை கண்காணித்தல் | 38–39 |
| 13. | வேகக் கட்டுப்பாட்டு கருவி பொருத்துதல் | 39–40 |
| 14. | சாலைப் பாதுகாப்பின் முறைகள் மற்றும் நடவடிக்கைகள் | 40–61 |
| 15. | சாலைப் பாதுகாப்பில் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் 2022 | 62–64 |
| 16. | முடிவுரை | 64–65 |

| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | பிற்சேர்க்கை–I<br>போக்குவரத்துத் துறையின் கீழ் செயல்படும் அலுவலகங்களின் விவரம் | 66–73 |
| | பிற்சேர்க்கை–II<br>ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் விவரம் | 74–75 |
| | பிற்சேர்க்கை–III<br>வாகனங்களின் விவரம் | 76–77 |
| | பிற்சேர்க்கை–IV<br>வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு | 78 |
| | பிற்சேர்க்கை–V–VI<br>தமிழ்நாட்டிலுள்ள வாகனங்களின் எண்ணிக்கை | 79–81 |
| | பிற்சேர்க்கை–VII–IX<br>வருவாய் வளர்ச்சி | 82–84 |

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## இயக்கூர்திகள் சட்டங்கள் – நிருவாகம்

## மானியக் கோரிக்கை எண்.25

## கொள்கை விளக்கக் குறிப்பு 2022–23

### I. சாலைப் போக்குவரத்தின் முக்கியத்துவம்

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி என்பது அனைத்து துறைகளின் வளர்ச்சியையும் நம்பியுள்ளது. தமிழகத்தில், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் போக்குவரத்துத் துறை குறிப்பிடத்தக்க பங்களிப்பை கொண்டுள்ளது. போக்குவரத்துத் துறையானது பொதுமக்களுக்கு பெரும் அளவிலான சேவையை வழங்குகிறது, குறிப்பாக அதிக எண்ணிக்கையிலான சரக்குகள் மற்றும் சேவைகளைக் கொண்டு செல்வதற்கு உதவுகிறது. "சாலைப் போக்குவரத்து" என்பது போக்குவரத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். மக்கள் தொகையின் விரைவான வளர்ச்சி மற்றும் அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகள் மோட்டார் வாகனங்களின் மிகப்பெரிய வளர்ச்சிக்கு சாதகமாக அமைந்துள்ளன. நவீன அமைப்புகள், கட்டமைப்புகள்

மற்றும் தரநிலைகள், தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகள் மற்றும் புதுமையான தரவு மேலாண்மை நடைமுறைகள் பொதுமக்களுக்கு திறமையான சேவையை வழங்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## 2. போக்குவரத்துத் துறையின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்

போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகம் உள்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. போக்குவரத்துத் துறை கீழ்க்கண்ட சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் தங்கள் கடமைகளைச் செய்கிறது.

- மோட்டார் வாகனச் சட்டம், 1988
- மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989
- தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள், 1989 மற்றும்
- தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டம் மற்றும் விதிகள், 1974

இத்துறையின் முக்கிய பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

(i) மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தல், பதிவுச் சான்றிதழ்களைப் புதுப்பித்தல், வாகனங்களின் உரிமம் மாற்றம் செய்தல், வாகனங்களை மறுபதிவு செய்தல், தவணைக் கொள்முதல் மேற்குறிப்பு செய்தல், தவணைக் கொள்முதல் இரத்து செய்தல் மற்றும் வாகனங்களில் மாற்றம் செய்தல் போன்றவை

(ii) ஓட்டுநர் மற்றும் நடத்துநர் உரிமங்கள் வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் மேற்குறிப்பு செய்தல்

(iii) ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் ஆய்வு செய்தல்

(iv) போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதிச் சீட்டு மற்றும் தகுதிச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்

(v) போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதிச் சீட்டில் உரிமம் மாற்றம் செய்தல் மற்றும் வாகன மாற்றம் செய்தல்

(vi) போக்குவரத்து வாகனங்களுக்கு தற்காலிக அனுமதிச்சீட்டு வழங்குதல்

(vii) மோட்டார் வாகனங்களுக்கான வரி மற்றும் கட்டணங்களை வசூலித்தல்

(viii) விபத்துக்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்தல்

(ix) மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டத்தை மீறும் வாகனங்களைச் சோதனை செய்தல்

(x) சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துதல்

(xi) பிற மாநிலங்களிலிருந்து சோதனை சாவடிகளில் (உள் வருகை மற்றும் வெளி செல்லுதல்) நுழையும் வாகனங்களுக்கு தற்காலிக அனுமதிச்சீட்டு வழங்குதல் மற்றும் வரி வசூலித்தல்

(xii) புகை பரிசோதனை மையங்களை நிறுவுவதற்கான உரிமங்களை வழங்குதல் மற்றும் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினால் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்துதல்

(xiii) மாநிலங்களுக்கிடையே போக்குவரத்து ஒப்பந்தங்களை ஏற்படுத்துதல் மற்றும் மாநிலங்களுக்குள் வாகனங்களை இயக்கச் செய்தல்

## 3. நிறுவன அமைப்பு மற்றும் நிருவாக அமைப்பு

போக்குவரத்து ஆணையர் / சாலைப் பாதுகாப்பு ஆணையர் போக்குவரத்துத் துறையின் தலைவராக உள்ளார். மேலும், போக்குவரத்து ஆணையர் மாநில போக்குவரத்து அதிகாரியாகவும் (STA) செயல்படுகிறார். தலைமையகத்தில், ஆணையருக்கு உதவியாக ஒரு கூடுதல் போக்குவரத்து ஆணையர், மூன்று இணைப் போக்குவரத்து ஆணையர்கள் மற்றும் மூன்று துணைப் போக்குவரத்து ஆணையர்கள் பணிபுரிகின்றனர்.

தற்போது இத்துறை 12 சரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன, அவை இணைப் போக்குவரத்து ஆணையர்கள் / துணைப் போக்குவரத்து ஆணையர்கள் தலைமையில் இயங்கி வருகின்றன. சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு சரகங்கள் இணைப் போக்குவரத்து ஆணையர்களின் தலைமையில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள விழுப்புரம், வேலூர், சேலம், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சி, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய எட்டு சரகங்கள் துணைப் போக்குவரத்து ஆணையர்களின் தலைமையில் இயங்கி வருகின்றன. இணைப் போக்குவரத்து ஆணையர்கள் (செயலாக்கம்), தலைமையில் சென்னையிலும், திருச்சியிலுள்ள ஸ்ரீரங்கத்திலும் இரண்டு செயலாக்கப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

ஒவ்வொரு சரகத்திலும் 3 முதல் 5 மாவட்டங்கள் உள்ளன. சரகங்கள் வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலர் தலைமையில் வட்டாரப் போக்குவரத்து

அலுவலகங்கள் செயல்படுகின்றன. மாவட்டங்களில் 3 முதல் 4 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் உள்ளன மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் 1 அல்லது 2 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் (பகுதி அலுவலகங்கள்) உள்ளன. அவை மோட்டார் வாகன ஆய்வாளர்களால் நிருவகிக்கப்படுகின்றன. மாநிலத்தில் 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 54 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் (பகுதி அலுவலகங்கள்) மற்றும் 22 சோதனைச் சாவடிகள் செயல்படுகின்றன. இந்த அலுவலகங்களின் விவரங்கள் பிற்சேர்க்கை–I–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

மாநில போக்குவரத்து ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் பின்வருமாறு:–

அ) மாநிலத்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்

ஆ) அரசால் பரிந்துரைக்கப்படும் எந்தவொரு பணிகளையும் நிறைவேற்றுதல்

இ) அனைத்து கருத்து வேறுபாடுகளுக்கும் மற்றும் இதர தர்க்கங்களுக்கும் தீர்வு காணல்,

மோட்டார் வாகனச் சட்டம், 1988 மற்றும் மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989 ஆகியவற்றின் கீழ் மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர்கள் சம்பந்தப்பட்ட மாவட்டத்திற்கான வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாகச் செயல்படுகின்றனர். இருப்பினும், சென்னையை பொறுத்தமட்டில் சென்னை (வடக்கு) மற்றும் சென்னை (தெற்கு) இணைப் போக்குவரத்து ஆணையர்கள் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளாக செயல்பட்டு வருகின்றனர். அந்தந்த மாவட்டங்களில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், வட்டாரப் போக்குவரத்து அதிகாரியின் செயலாளர்களாக செயல்பட்டு வருகின்றனர்.

மோட்டார் வாகனச் சட்டம், 1988, பிரிவு 89(2) – ன்கீழ் மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் (STAT), மாவட்ட நீதிபதி பதவிக்குக் குறைவில்லாத பதவி அல்லது உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்க தகுதி பெற்ற

நீதித்துறை அதிகாரியின் தலைமையின் கீழ் செயல்படுகிறது. மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டுத் தீர்ப்பாய தலைவர் அவர்கள் மாநிலப் போக்குவரத்து அதிகாரி மற்றும் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் பிறப்பித்த உத்தரவுகளுக்கு எதிரான மேல்முறையீடுகள் மற்றும் சீராய்வு மனுக்களை விசாரிக்கும் அதிகாரியாக செயல்படுகிறார். மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பணி நிலையில் உள்ள இரண்டு அதிகாரிகளில், ஒருவர் செயலராக அலுவலகப் பணிகளைக் கவனிக்கவும், மற்றொருவர் துறைப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டு, இந்தத் துறையின் சார்பாக வழக்குகளுக்கு உதவவும், வாதிடவும் உதவுகிறார்கள். பணியாளர் விவரங்கள் பிற்சேர்க்கை–II இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 4. சாலையில் ஓடும் வாகனங்களின் விவரம் மற்றும் தமிழ்நாட்டில் அதன் வளர்ச்சி

31.03.2022 அன்றைய நிலவரப்படி, மாநிலத்தில் போக்குவரத்து வாகனங்கள் 13.35 இலட்சம் மற்றும்

போக்குவரத்து அல்லாத வாகனங்கள் 310.09 இலட்சம் ஆக மொத்தம் 323.44 இலட்சம் வாகனங்கள் இயங்கி வருகின்றன. மோட்டார் வாகனங்கள், போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்கள் என வகைப்படுத்தப் பட்டுள்ளன. பயணிகள் / சரக்குகளை வாடகைக்கு அல்லது வெகுமதிக்காக கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் வாகனங்கள் போக்குவரத்து வாகனங்களாகும். அவைகள் முறையே, ஆட்டோ ரிக்க்ஷாக்கள், சுற்றுலாச் சீருந்து, மேக்ஸிகேப், நிலைப் பேருந்து, சரக்கு வாகனங்கள், ஆம்னி பேருந்துகள், பள்ளிப் பேருந்துகள் மற்றும் தனியார் சேவை வாகனங்கள் ஆகியவைகளாகும்.

வணிகப் பயன்பாட்டிற்கு அல்லாமல் சொந்த பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் இருசக்கர வாகனங்கள் (மோட்டார் சைக்கிள் / ஸ்கூட்டர்), இலகுரக வாகனங்கள் (சீருந்து / மூன்று சக்கர வாகனங்கள்), மாற்றுத் திறனாளிகள் இயக்கும் வாகனங்கள் (எந்தவொரு மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட

வாகனங்கள்) போன்றவை போக்குவரத்து அல்லாத வாகனங்கள் ஆகும்.

போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் வாகனங்களின் பெருக்கம் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை – III முதல் VI வரை கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கையில் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்கள் முறையே 4.13 விழுக்காடு மற்றும் 95.87 விழுக்காடு ஆகும். தமிழ்நாட்டில் உள்ள மொத்த இரு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை 272.94 இலட்சமாகும். இது தமிழ்நாட்டிலுள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கையில் 84.39 விழுக்காடு ஆகும்.

## 5. ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான நடைமுறைகள்

ஓட்டுநர் உரிமம் விண்ணப்பிப்பதற்கு முன், ஒருவர் பழகுநர் ஓட்டுநர் உரிமம் (LLr) பெற வேண்டும். 18 வயது நிறைவடைந்த பிறகு, https://sarathi.parivahan.gov.in/ என்ற இணையதளம்

மூலம் யார் வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம். ஒருவர் தங்கள் வசிக்கும் இருப்பிடத்தின் அஞ்சல் குறியீட்டின் (Pincode) உதவியுடன் தங்கள் வட்டார போக்குவரத்து அலுவலகம் / பகுதி அலுவலகத்தைத் தேர்ந்தெடுக்கலாம். தேவையான அனைத்துத் தகவல்களையும் பூர்த்தி செய்த பிறகு, வயதிற்கான சான்றிதழ், இருப்பிடத்திற்கான சான்றிதழ் மற்றும் இரத்த வகை பிற தேவையான ஆவணங்களை பதிவேற்றம் செய்து, பிறகு உரிய கட்டணத்தை இணையதளம் மூலமாக செலுத்த வேண்டும். பின்னர் விண்ணப்பதாரர் தேவையற்ற காத்திருப்பு நேரத்தை தவிர்க்க வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் / பகுதி அலுவலகத்தில் புகைப்படம் எடுக்க ஆன்லைன் மூலம் விண்ணப்பதாரர் வரும் நேரத்தை பதிவு செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகு அவர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் / பகுதி அலுவலகத்தில் முதற்கட்டத் தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண்டும். சாலை அடையாளங்கள், போக்குவரத்து விதிகள் மற்றும் பழகுநர் உரிமத்திற்கான விதிமுறைகள் போன்ற பழகுநர் உரிம சோதனையின் உள்ளடக்கங்கள் பற்றிய கேள்வி வங்கி, துறையின்

இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகன ஆய்வாளரின் ஒப்புதலுக்குப் பிறகு, பழகுநர் ஓட்டுநர் உரிமத்தை இணைய தளத்திலிருந்து அச்சிட்டு எடுத்துக் கொள்ளலாம், இவ்வாறு பெறப்பட்ட பழகுநர் ஓட்டுநர் உரிமம் (LLr) ஆறு மாத காலத்திற்கு தகுதியுடையதாகும். 2021–2022–ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்ட பழகுநர் ஓட்டுநர் உரிமங்களின் எண்ணிக்கை 10.07 இலட்சமாகும்.

பழகுநர் ஓட்டுநர் உரிமம் பெற்ற ஒருவர் நிரந்தர ஓட்டுநர் உரிமத்திற்கு, பழகுநர் ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குப் பிறகு அல்லது ஆறு மாதங்களுக்குள் விண்ணப்பிக்கலாம். மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989 விதி 15–ன் படி, விண்ணப்பதாரர் ஓட்டுநர் தேர்வில் கலந்து கொள்ள வேண்டும். 2021 – 2022–ஆம் நிதியாண்டில், 7.64 இலட்சம் எண்ணிக்கையிலான புதிய ஓட்டுநர் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் 31.03.2022 அன்று வரை வழங்கப்பட்டுள்ள மொத்த ஓட்டுநர் உரிமங்களின் எண்ணிக்கை 2.60 கோடியாகும்.

## 6. மோட்டார் வாகனங்களுக்கான பதிவுச்சான்றிதழ் வழங்குதல்

ஒவ்வொரு மோட்டார் வாகனமும் எந்தவொரு பொதுச்சாலையில் பயன்படுத்துவதற்கு முன்பு மோட்டார் வாகனச் சட்டம், 1988, பிரிவு 39–ன் கீழ், தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்த பின்னரே, வாகனத்தை எந்தப் பொதுச் சாலையிலும் ஓட்ட அனுமதிக்க முடியும். போக்குவரத்து வாகனங்களுக்கு நிரந்தர பதிவு எண் பலகை மஞ்சள் நிறத்திலும், போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு வெள்ளை நிறத்திலும், மின்சார வாகனங்களுக்கு (மின்கலம் மூலம் இயக்கப்படும் வாகனம்) போக்குவரத்து வாகனங்களுக்கு பலகை பச்சை நிறப் பின்னணியில் மஞ்சள் நிறத்திலும், போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு பச்சை நிறப் பின்னணியில் வெள்ளை நிறத்திலும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2021–2022–ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்ட மொத்த பதிவுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 14.50 இலட்சமாகும். போக்குவரத்து

அல்லாத வாகனங்களைப் பொறுத்தவரை, பதிவுச் சான்றிதழ் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்கு தகுதியுடையதாகும். அதன் பிறகு, ஒவ்வொரு 5 வருடங்களுக்கும் வாகனப் பதிவுச் சான்றிதழ் புதுப்பித்தல் செய்யப்பட வேண்டும்.

## 6 (அ) . தமிழ்நாடு மின்சார வாகன கொள்கை

சாலைப் போக்குவரத்திற்காக மின்சார வாகனங்களை பயன்படுத்துவதால், காற்றின் சிறப்பான தரம், குறைக்கப்பட்ட ஒலிமாசுபாடு, மேம்படுத்தப்பட்ட ஆற்றல் பாதுகாப்பு, புகையால் மாசுபடாமை போன்ற பரந்த அளவிலான இலக்குகளுக்கு பங்களிக்கிறது. தமிழகத்தில் மின் வாகனங்களை ஊக்குவிக்கும் வகையில், மின் வாகனங்கள் கொள்கையை மாநில அரசு செயல்படுத்தி, மின்சாரம் மூலம் இயக்கப்படும் அனைத்து போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு (மின்சார வாகனங்கள்) 31.12.2022 வரை மோட்டார் வாகன வரி செலுத்துவதில் இருந்து 100% விலக்கு அளித்துள்ளது.

பதிவுச் சான்றிதழில் எந்த வகையான எரிபொருளையும் மின் வாகனங்களாக மாற்றுவதற்கு, ARAI (Automotive Research Association of India), ICAT (International Centre for Automotive Technology) போன்ற வாகன தரச்சான்று அங்கீகரிக்கும் முகவர்களிடமிருந்து தேவையான ஒப்புதல் சான்றிதழைப் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட வாகன விற்பனையாளர்–களிடமிருந்து பெறப்பட்ட மின்சார உந்துவிசை ரெட்ரோ–ஃபிட்மென்ட் கருவிகள் (Kits), பொருத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். மின்சார வாகனத்தில் இரு சக்கர வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களைப் பொறுத்தவரை எந்த வகையான எரிபொருளையும் மின்சார வாகனமாக மாற்றுவதற்கு இரண்டு ரெட்ரோ–ஃபிட்மென்ட் கருவிகளுக்கு இதுவரை ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

புதிய வாகன வகைகள் (Model) மற்றும் அதன் வாகன மாறுபாட்டிற்கு (variant) பதிவு அனுமதி வழங்கப்படுகிறது. ARAI (Automotive Research

Association of India), ICAT (International Centre for Automotive Technology) போன்ற வாகன தரச்சான்று அங்கீகரிக்கும் முகவர்களிடமிருந்து பெறப்பட்ட தேவையான ஒப்புதல் சான்றிதழ் அடிப்படையில், மின்சாரம் (Battery) மூலம் இயங்கும் வாகனங்களுக்கு ஒப்புதல் சான்றிதழ் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது:–

மூன்று சக்கர வாகனங்கள் – 37

இரு சக்கர வாகனங்கள் –15

கார்கள் – 6

**அட்டவணை – 1**

**சுருக்கம்**

**2021–2022 – ஆம் நிதியாண்டில் பதிவு செய்யப்பட்ட மின்–வாகனங்களின் எண்ணிக்கை**

| வ. எண். | வாகன வகை | மின்வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | போக்குவரத்து வாகனங்கள் | 2764 |
| 2. | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | 36865 |
| | **ஆக மொத்தம்** | 39629 |

## 7. போக்குவரத்து வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழை பெறுவதற்கான அவசியம் மற்றும் நடைமுறை

வாகனங்களின் தகுதிச் சான்றிதழ் செல்லத்தக்கதாக இருந்தால் மட்டுமே அவ்வாகனங்களின் பதிவுச்சான்று நடப்பில் உள்ளதாக கருதப்படும். தகுதிச் சான்றிதழைப் பெறுவதற்கு இணையதளம் மூலமாக விண்ணப்பித்து, தேவையான அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றம் செய்த பிறகு, மோட்டார் வாகனச் சட்டம், 1988, பிரிவு 56 மற்றும் மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989 விதி 62–ன் கீழ், தகுதிச் சான்றிதழ் பெறுவதற்கு வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர்கள் சோதனை செய்யும் பொருட்டு நேரிடையாக கொண்டு செல்ல வேண்டும்.

போக்குவரத்து வாகனங்களைப் பொறுத்தமட்டில், பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து எட்டு ஆண்டுகள் வரை 2 வருடத்திற்கு ஒருமுறை தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து எட்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட

வாகனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. 2021–22– ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 5.52 இலட்சமாகும்.

## 8. மாநில கருவூலத்திற்கான வருவாய்

மாநிலத்தின் வருவாய் ஈட்டும் துறைகளில் போக்குவரத்துத் துறையும் ஒன்று. இந்தத் துறையால் வழங்கப்படும் பல்வேறு சேவைகளுக்கான கட்டணம், இணக்கக் கட்டணம் மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், 1988இல் கூறப்பட்டுள்ள விதி மீறல்களுக்கான அபராதங்கள் மற்றும் வரிகள், உபரி வரி, பசுமை வரி, சாலைப்பாதுகாப்பு வரி மற்றும் சேவைக் கட்டணங்கள் ஆகியவை இத்துறையின் வருவாய்க்குள் அடங்கும். 2021–2022–ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட மொத்த வருவாய் ரூ.5626.80 கோடி ஆகும். கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான வருவாய் வசூல் இணைப்பு–VII முதல் IX வரை வழங்கப்பட்டுள்ளது.

## 9. உள் கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் சேவைகளை திறமையாக வழங்குதல்

### (அ) அலுவலக உள்கட்டமைப்பு (நிலம் மற்றும் கட்டடம்)

i) தற்போது, போக்குவரத்து ஆணையர் / சாலைப் பாதுகாப்பு ஆணையரின் கட்டுப்பாட்டில் 12 சரக அலுவலகங்கள், 2 இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்) அலுவலகங்கள், 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 54 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் (பகுதி அலுவலகங்கள்) மற்றும் 22 சோதனைச் சாவடிகள் செயல்படுகின்றன. இவற்றில் 12 சரக அலுவலகங்கள், 69 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 25 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் (பகுதி அலுவலகங்கள்), 15 சோதனைச் சாவடிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 22 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 29 பகுதி அலுவலகங்கள் மற்றும் 7 சோதனைச்

சாவடிகள் வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

ii) 2021–2022–ஆம் ஆண்டில், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி அலுவலகங்கள்) அலுவலகங்களுக்கான சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சங்கரன்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் பரமத்திவேலூர், வத்தலக்குண்டு ஆகிய 2 மோட்டார் வாகன ஆய்வாளர்கள் (பகுதி அலுவலகங்கள்) அலுவலகங்களுக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி அலுவலகங்கள்) அலுவலகங்களுக்கு நிலம் கையகப்படுத்த தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

iii) 2021–22–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, மதுரை (தெற்கு) மற்றும் கோவை (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் திருத்தணியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் (பகுதி அலுவலகம்) ஆகியவற்றிற்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(ஆ) ஓட்டுநர் தேர்வு தளங்கள்**

ஓட்டுநர் தேர்வு, 44 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 10 மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி அலுவலகங்கள்) அலுவலகங்களில் உள்ள ஓட்டுநர் தேர்வு தளங்களில் நடத்தப்படுகின்றன. ஓட்டுநர் தேர்வு தளங்களை கணினிமயமாக்கலின் ஒரு பகுதியாக, 14 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வுதளங்களை உருவாக்க ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் கரூர் வட்டாரப் போக்குவரத்து

அலுவலகத்தில் உள்ள ஓட்டுநர் தேர்வு தளம் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஓட்டுநர் தேர்வு தளங்களை படிப்படியாக கணினிமயமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**(இ) செயலாக்கப் பிரிவினை வலுப்படுத்துதல்**

மோட்டார் வாகனச் சட்டம், 1988 மற்றும் அதன்கீழ் வகுக்கப்பட்ட விதிகளை செயலாக்கம் செய்வது இத்துறையின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். போக்குவரத்துத் துறையானது 12 சரக அலுவலகங்கள் மற்றும் 2 இணைப் போக்குவரத்து ஆணையர்கள் (செயலாக்கம்) ஸ்ரீரங்கம் மற்றும் சென்னை ஆக மொத்தம் 14 செயலாக்கப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. திருநெல்வேலி செயலாக்கம் தவிர சரகத்தில் உள்ள ஒவ்வொரு செயலாக்கப் பிரிவிற்கும் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலர் தலைமை வகிக்கிறார். மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–I மற்றும் நிலை–II ஆகியோர் அவருக்கு உதவுகிறார்கள். இதுதவிர, செயலாக்கப் பணிகளை வலுப்படுத்த, 2016–ஆம் ஆண்டில், மாவட்டங்களில் இயங்கி வரும் வட்டாரப்

போக்குவரத்து அலுவலரின் கீழ் ஒரு மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–I மற்றும் இரண்டு மோட்டார் வாகன ஆய்வாளர்கள் நிலை–II ஆகியோர் அடங்கிய 15 செயலாக்கப் பிரிவுகள் உருவாக்கப்பட்டன. செயலாக்கப்பணியில் உள்ள அலுவலர்களின் முக்கிய செயல்பாடுகள், அதிக ஆட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மற்றும் அதிக பாரம் ஏற்றிச் செல்லும் சரக்கு வாகனங்களை கண்டறிதல், அனுமதிச் சீட்டு இல்லாமலும், தகுதிச் சான்றிதழ் இல்லாமலும், ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், வரி செலுத்தாமலும் இயங்கும் வாகனங்கள் மற்றும் மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளை பின்பற்றாமல் இயங்கும் வாகனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாகும்.

செயலாக்கப் பணியாளர்கள் மூலம் 2021–2022–ஆம் ஆண்டில், 9.27 இலட்சம் வாகனங்கள் தணிக்கை செய்யப்பட்டு அவற்றில் 1.67 இலட்சம் வாகனங்களுக்கு சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வரியாக ரூ.15.63 கோடியும், இணைக்கக் கட்டணமாக

ரூ. 20 . 81 கோடியும் வசூலிக்கப்பட்டுள்ளது. குற்றங்களின் விவரங்கள் பின்வருமாறு :–

## அட்டவணை – 2

| வ. எண் | குற்றங்களின் விவரம் | குற்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தகுதிச் சான்றிதழை தற்காலிகமாக இரத்து செய்தல் | 1857 |
| 2. | சிறை பிடிக்கப்பட்ட வாகனங்கள் | 20114 |
| 3. | அதிக நபர்களை ஏற்றிச் செல்லுதல் | 14306 |
| 4. | அதிக சரக்குகளை ஏற்றிச் செல்லுதல் | 13265 |
| 5. | அனுமதிச் சீட்டு இல்லாமல் இயக்குதல் | 2927 |
| 6. | தகுதிச் சான்றிதழ் இல்லாமல் இயக்குதல் | 7188 |
| 7. | காப்பீட்டுச் சான்றிதழ் இல்லாமல் இயக்குதல் | 29158 |

| வ. எண் | குற்றங்களின் விவரம் | குற்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 8. | வரி செலுத்தாமல் இயக்குதல் | 4388 |
| 9. | சிவப்பு பிரதிபலிப்பான்கள் இல்லாமல் இயக்குதல் | 20417 |
| 10. | பின்புறம் சிகப்பு விளக்குகள் பொருத்தாமல் இயக்குதல் | 10251 |
| 11. | வாகன ஆவணங்களின் நடப்பு விவரங்கள் வாகனத்தின் இடதுபுறத்தில் எழுதப்படாதது | 13064 |
| 12. | ஓட்டுநர் உரிமங்கள் இல்லாமல் இயக்குதல் | 31433 |
| 13. | நடைசீட்டு பராமரிக்கப்படாமல் இயக்குதல் | 14468 |
| 14. | அனுமதிக்கப்பட்ட உயரத்திற்கு மேல் பொருட்களை ஏற்றிச் செல்லுதல் | 4859 |
| 15. | பின்புறம் அதிகமாக பாரம் நீட்டி இருத்தல் | 2794 |
| 16. | பக்கவாட்டில் பாரம் அதிகமாக நீட்டி இருத்தல் | 1319 |

| வ. எண் | குற்றங்களின் விவரம் | குற்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 17. | ஆட்டோரிக்ஷா கட்டணமானி பழுதடைந்த நிலையில் வாகனத்தை இயக்குதல் | 603 |
| 18. | அனுமதிச்சீட்டினை தவறான முறையில் பயன்படுத்துதல் | 1562 |
| 19. | அதிக வேகமாக வாகனத்தை இயக்குதல் | 10654 |
| 20. | அதிக கட்டணம் வசூலித்தல் | 267 |
| 21. | பல்வகை ஒலி எழுப்பும் காற்று ஒலிப்பான்களை பயன்படுத்துதல் | 6496 |
| 22. | அங்கீகரிக்கப்படாத தடங்களில் வாகனத்தை இயக்குதல் | 408 |
| 23. | தார்பாயால் மூடப்படாத மணல் லாரிகள் | 4299 |
| 24. | கண் கூசும் முகப்பு விளக்குகளை பொருத்தி இருத்தல் | 8714 |
| 25. | தகுதி வாய்ந்த புகைக் கட்டுப்பாட்டு சான்றிதழ் இல்லாமல் இயக்குதல் | 18601 |

| வ. எண் | குற்றங்களின் விவரம் | குற்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 26. | மது அருந்திவிட்டு வாகனங்களை இயக்குதல் | 220 |
| 27. | திரவ எரிவாயு கிட் அனுமதி பெறாமல் பொருத்தி இருத்தல் | 34 |
| 28. | பள்ளிப் பேருந்துகளில் அதிக குழந்தைகளை ஏற்றிச் செல்லுதல் | 303 |

**(ஈ) இ–சலான் செயலி (e–challan application)**

இ–சலான் செயலி ஆண்ட்ராய்டு அடிப்படையிலான கைபேசி (Mobile) பயன்பாடு மற்றும் இணைய தளம் மூலமாக இயங்கும் ஒரு மென்பொருள் பயன்பாடாகும், இது போக்குவரத்து செயலாக்க அதிகாரிகள் மற்றும் போக்குவரத்து காவல்துறையினருக்கு ஒரு விரிவான தீர்வை வழங்கும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது. இந்த செயலி " வாகன்" மற்றும் " சாரதி" பயன்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. பாயின்ட் ஆஃப் சேல் (POS) இயந்திரங்கள் மூலம் இணையதளத்தில் பணம்

செலுத்தி அபராதங்களை செயலாக்க அதிகாரிகள் வசூலித்து வருகின்றனர். இந்த செயலி மூலம் அனைத்து பயன்பாட்டுத் துறைகளை இணைப்பதன் வாயிலாக தரவு ஒருமைப்பாடு, நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்படுகிறது.

## 10. நவீனமயமாக்குதல் மற்றும் மின் – ஆளுமை நடவடிக்கைகள்

### (அ) மின் ஆளுமை

போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகம் பொதுமக்களுக்கான சேவையின் தரத்தை மேம்படுத்தவும், பொதுமக்களின் தேவைகளை உடனுக்குடனும், சிரமமின்றியும், பாதுகாப்பானதாக வழங்கவும், பணியின் தரத்தை மேம்படுத்தவும், வெளிப்படையான சேவைகளை வழங்கவும் பல்வேறு சேவைகளைத் தொடங்கியுள்ளது. "வாகன்" (https://vahan.parivahan.gov.in/vahan/) என்ற இணைய தளம் மூலம் பொதுமக்கள் வாகனம் தொடர்பான அனைத்து பரிவர்த்தனைகளையும் பெறலாம்,

அதாவது தகுதிச் சான்றிதழ், வரி மற்றும் கட்டணம் வசூலித்தல், உரிமை மாற்றம், தவணைக் கொள்முதல், முகவரி மாற்றம் ஆகியவற்றைப் பெறலாம். இதேபோல் "சாரதி" (https://sarathi.parivahan.gov.in/) என்ற இணைய தளம் ஓட்டுநர் உரிமம் தொடர்பான அனைத்து பரிவர்த்தனைகளையும் எளிதாக்குகிறது. மின் ஆளுமை (e–Governance) நடைமுறைக்கு வந்த பிறகு, தரவு கையாளுதல் எளிதாகவும் வேகமாகவும் நடைபெறுகிறது. எனவே, இத்துறை பொதுமக்களுக்கு வசதியான, திறமையான மற்றும் வெளிப்படையான முறையில் சேவைகளை வழங்கி வருகின்றது.

### (ஆ) தேசியப் பதிவேடு

வாகனப் பதிவுகள் மற்றும் ஓட்டுநர் உரிமங்கள் அடங்கிய தேசியப் பதிவேட்டின் தரவுகள் அனைத்தும் புதுதில்லியில் உள்ள மத்திய கிளவுட் (cloud) சர்வரில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. அனைத்து அலுவலகங்களிலும் வலைதள அடிப்படையிலான 'சாரதி' மற்றும் 'வாகன்' மென்பொருள்

பயன்படுத்துவதன் மூலம் போலியான பதிவுகள் தவிர்க்கப்படுகின்றன. மேலும், விவரங்களைத் துல்லியமாகவும், விரைவாகவும் பெறுவதற்கு உதவுகிறது.

**(இ) வலைதள அடிப்படையிலான ஓட்டுநர் உரிமங்கள் / பதிவுச் சான்றிதழ்கள் நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஸ்மார்ட் அட்டை (Smart Card) மூலம் பதிவுச் சான்றிதழ்கள் / ஓட்டுநர் உரிமங்கள் வழங்குதல்**

வலைதள அடிப்படையிலான 'சாரதி' மற்றும் 'வாகன்' மென்பொருள் அனைத்து போக்குவரத்து அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து ஓட்டுநர் உரிமங்களும், பதிவுச் சான்றிதழ்களும் ஸ்மார்ட் அட்டை (Smart Card) மூலம் வழங்கும் திட்டம் அனைத்து போக்குவரத்து அலுவலகங்களிலும் நடைமுறையிலுள்ளது. ஆதார் அட்டையை அடையாள ஆவணமாக பயன்படுத்தி நேரடி தொடர்பின்றி ஓட்டுநர் உரிமச் சேவைகளைப் பெற சாரதி போர்ட்டலில் கூடுதல் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

## (ஈ) இணையதளம் வாயிலாக வரிகள் மற்றும் கட்டணங்கள் செலுத்துதல்

பரிவாகன் (parivahan) என்ற இணையதளம் https://parivahan.gov.in/parivahan வாயிலாக ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா மற்றும் கனரா வங்கி பேமெண்ட் நுழைவு வழி (Payment gate way) வாயிலாக கட்டணம் மற்றும் வரியை (e–payment மூலமாக) செலுத்துவது வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதுடன் பொதுமக்களின் காலவிரயத்தையும், வீண் அலைச்சலையும், பொருட்செலவையும் மிச்சப்படுத்துகிறது. 2021–22-ஆம் ஆண்டில் இணையதளம் (e–payment) வாயிலாக வருவாய் வசூல் ரூ. 5271 . 98 கோடியாகும். இது மொத்த வருவாய் வசூலில் 94 சதவீதம் ஆகும்.

## அட்டவணை – 3

| வரிசை எண் | ஆண்டு | ஓட்டுநர் உரிமங்கள் மூலமாக கட்டணம் | வாகனப் பதிவின் மூலம் வரி மற்றும் கட்டணம் | மோட்டார் வாகன வரி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | | |
| 1. | 2013–2014 | – | 1386.52 | 10.78 | 1397.30 |
| 2. | 2014–2015 | – | 1524.26 | 40.35 | 1564.61 |
| 3. | 2015–2016 | – | 1766.30 | 318.29 | 2084.59 |
| 4. | 2016–2017 | – | 2115.48 | 465.15 | 2580.63 |
| 5. | 2017–2018 | – | 2300.15 | 545.27 | 2845.42 |
| 6 | 2018–2019 | 94.13 | 1989.42 | 932.96 | 3016.51 |
| 7. | 2019–2020 | 320.35 | 3774.56 | 1100.60 | 5195.51 |
| 8. | 2020–2021 | 233.00 | 3217.24 | 902.05 | 4352.29 |
| 9. | 2021–2022 | 218.86 | 3974.84 | 1078.28 | 5271.98 |

### (உ) தகுதிச் சான்றிதழ் மென்பொருள் செயலி

தகுதிச் சான்றிதழ்கள் வழங்கும் போது, வாகனங்களை சோதனை செய்யும் நாள் மற்றும் நேரத்தைப் பதிவுசெய்து, ஆய்வு செய்யப்பட்ட வாகனங்களின் புகைப்படங்களை எடுக்க, மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு சிறுகணினி (Tab)

வழங்கப்பட்டுள்ளது. தகுதிச் சான்றிதழ்களை வழங்குவதற்கான ஒப்புதல் "வாகன்" மென்பொருளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வாகனத்தின் நிலை பற்றிய ஆதாரங்களை எதிர்காலக் குறிப்புக்காக வைப்பதன் மூலம் வாகனங்களை சோதனை செய்யும் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

**(ஊ) ஆதாரை அடையாள ஆவணமாக பயன்படுத்தி பொதுமக்களுக்கு நேரடி தொடர்பின்றி வட்டாரப் போக்குவரத்து அலுவலக சேவைகளை வழங்குதல்**

அரசாணை (நிலை) எண். 415, உள் (போக்குவரத்து-7) துறை, நாள் 30.09.2021-ன்படி பொதுமக்கள் ஆதாரை அடையாள ஆவணமாகப் பயன்படுத்தி, பழகுநர் ஓட்டுநர் உரிமத்தைப் பெறுதல், ஓட்டுநர் உரிமத்தைப் புதுப்பித்தல் மற்றும் ஓட்டுநர் உரிமத்தில் முகவரியை மாற்றுதல் ஆகியவற்றிற்கான நேரடி தொடர்பு இல்லாத சேவைகளை வழங்க அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டம், அரசு மக்களுக்கு வழங்கும் சேவையின் செயல்முறைகளை

எளிதாக்குகிறது, வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனைக் கொண்டு வருகிறது மற்றும் விண்ணப்பதாரர்கள் தங்களுடைய பணியை தடையின்றி நேரடியாகச் செய்ய உதவுகிறது. இதன் மூலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் கூட்டம் குறைவதுடன், பொதுமக்களுக்கு போதுமான வசதியும் ஏற்படுத்தப்படுகிறது. மேற்காணும் சேவைகளை பொது மக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12.04.2022 அன்று துவக்கி வைத்தார்.

**11. அண்டை மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து வசதியை மேம்படுத்துதல் மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து ஒப்பந்தங்கள்**

அண்டை மாநிலங்களில் வாழும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ளவும், சுமுகமான உறவுகள் ஏற்படுத்திடவும், அண்டை மாநிலங்களுக்கிடையே சரக்குகள் மற்றும் பயணிகள் போக்குவரத்து இயக்குவது மிகவும் அவசியமாகிறது. ஒருமித்த கருத்தின் அடிப்படையில்

ஒருமுனைவரி அல்லது வரிச் சலுகைகளுடன் தேவையான அளவிற்கு சரக்கு வாகனங்கள், ஒப்பந்த ஊர்திகள், நிலைப் பேருந்துகளை இயக்குவதற்கு அண்டை மாநிலங்களுக்கிடையே போக்குவரத்து ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு ஏற்கெனவே, அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம், கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களுடன் மாநில ஒப்பந்தங்கள் செய்துள்ளது.

<u>அட்டவணை– 4</u>

| வ.எண் | அண்டை மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து ஒப்பந்தங்கள் | முதன்மை ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்ட ஆண்டு | துணை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்–பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1, | கர்நாடகம் | 1973 | 1973, 1975, 2005, 2008 |
| 2. | கேரளா | 1976 | 1979, 1984, 1995, 1999, 2008, 2019 |
| 3. | ஆந்திரப் பிரதேசம் | 1975 | 1976, 1993, 1994 |
| 4. | புதுச்சேரி | 1985 | 2011 |

## அட்டவணை– 5

## மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து ஒப்பந்தங்களின்படி இயங்கும் மோட்டார் வாகனங்கள்

| வ. எண் | மாநிலங்கள் | நிலைப் பேருந்துகள் | | ஒப்பந்த ஊர்திகள் | சரக்கு வாகனங்கள் |
|---|---|---|---|---|---|
| | | தடங்கள் | பேருந்துகள் | | |
| 1. | தமிழ்நாட்டிலிருந்து ஆந்திராவிற்கு | 108 | 392 | 200 | 10000 |
| 2. | ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிற்கு | 123 | 467 | 200 | 10000 |
| 3. | தமிழ்நாட்டிலிருந்து கர்நாடகாவிற்கு | 219 | 544 | 328/5000 | 15000 |
| 4. | கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு | 227 | 530 | 599/5000 | 15000 |
| 5. | தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்கு | 144 | 273 | 300 | 5000 |
| 6. | கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு | 197 | 225 | 300 | 5000 |
| 7. | தமிழ்நாட்டிலிருந்து புதுச்சேரிக்கு | 207 | 428 | வரம்பு இல்லை | 8000 |
| 8. | புதுச்சேரியிலிருந்து தமிழ்நாட்டிற்கு | 140 | 171 | வரம்பு இல்லை | 800 |

## 12. பள்ளிப் பேருந்துகளின் இயக்கங்களை கண்காணித்தல்

மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினை கருத்தில் கொண்டும் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களின்படியும், பள்ளிப் பேருந்துகளில் பயணம் செய்யும் மாணவ மாணவியர்களின் பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (பள்ளிப் பேருந்துகள் ஒழுங்குமுறை மற்றும் கட்டுப்பாடு) சிறப்பு விதிகள், 2012 உருவாக்கப்பட்டது. இது 01.10.2012 முதல் அமலுக்கு வந்தது.

பள்ளிப் பேருந்துகளுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்க சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கல்வியாண்டு தொடங்கும் முன், பள்ளிப் பேருந்துகள் சிறப்புக் குழுக்கள் மூலம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, கல்வி நிறுவன வாகனங்களில் தகுதிச் சான்றிதழ், காப்பீட்டுச் சான்றிதழ் மற்றும் அனுமதிச் சீட்டு ஆகியவை நடப்பில் இருந்தால் மட்டுமே பள்ளி பேருந்துகளில் மாணவ, மாணவியர்கள் பயணம்

செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது. இவ்வாறு பள்ளி பேருந்துகள், தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (பள்ளிப் பேருந்துகள் ஒழுங்குமுறை மற்றும் கட்டுப்பாடு) சிறப்பு விதிகள், 2012–ன்படி ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இந்த விதிமுறைகள் தவிர, அனைத்து கல்வி நிறுவன பேருந்துகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) மற்றும் புவியிடங்காட்டி (GPS) அமைப்புகள் பொருத்தப்பட்டுள்ளதா என வாகனங்களை பதிவு செய்யும் போதும், தகுதிச் சான்றிதழ்களை வழங்கும் போதும் மற்றும் வழக்கமான செயலாக்கப் பணியின் போதும் ஆய்வு செய்யப்படுகிறது. இவ்வாறு அனைத்து கல்வி நிறுவன பேருந்துகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) மற்றும் புவியிடங்காட்டி (GPS) பொருத்தப்பட்டுள்ளது.

## 13. வேகக் கட்டுப்பாட்டு கருவி பொருத்துதல்

போக்குவரத்து வாகனத்தில் வேகக் கட்டுப்பாட்டு கருவிகள் பொருத்தப்பட்டால் சாலை விபத்துகள் மற்றும் விபத்தினால் ஏற்படும் இறப்புகள் குறையும். ஆய்வு செய்யும் அதிகாரிகள் தகுதிச் சான்றிதழ்

வழங்கும்போது, அரசு நிர்ணயித்த விதிமுறைகளின்படி வேகக்கட்டுப்பாட்டு கருவி செயல்படுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும். வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகளைப் பொருத்துவது "வாகன்" மென்பொருளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

## 14. சாலைப் பாதுகாப்பு முறைகள் மற்றும் நடவடிக்கைகள்

சாலைப் பாதுகாப்பு என்பது அனைத்து சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பயன்படுத்தி சாலை விபத்துகளைத் தடுப்பது மற்றும் பாதுகாப்பது ஆகும். இது சாலைகளில் பயணிக்கும் மக்களை பாதுகாப்பதற்காக, அதாவது பாதசாரிகள், இரு சக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள், பல சக்கரங்கள் உள்ள வாகனங்கள் மற்றும் பிற போக்குவரத்து வாகனங்களைப் பயன்படுத்துபவர்கள் என சாலையைப் பயன்படுத்துபவர்கள் அனைவரையும் பாதுகாக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டதாகும். சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை வாழ்நாள் முழுவதும் கடைபிடிப்பது

அனைவருக்கும் பாதுகாப்பானது. ஒவ்வொருவரும் வாகனம் ஓட்டும்போதும் அல்லது சாலையில் நடந்து செல்லும் போதும் மற்றவர்களை மதிக்க வேண்டும் மற்றும் அவர்களின் பாதுகாப்பில் அக்கறை காட்ட வேண்டும்.

"விபத்தில்லா தமிழ்நாடு" என்ற இலக்கை அடைவதற்காக, காவல், நெடுஞ்சாலை, சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

## (அ) நிறுவன அமைப்பு

சாலைப் பாதுகாப்பின் நிறுவன அமைப்பைப் பொறுத்தவரை, மாநில சாலைப் பாதுகாப்பு குழு என்பது சாலைப் பாதுகாப்பு தொடர்பான அனைத்துக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட உயர்நிலை அமைப்பாகும். இம்மாநில சாலைப் பாதுகாப்பு குழுவானது, மோட்டார் வாகனச் சட்டம், 1988, பிரிவு 215(2)–இன் படி மாண்புமிகு

போக்குவரத்துத் துறை அமைச்சர் தலைமையில் 21 உறுப்பினர்களுடன் உருவாக்கப்பட்டது.

சாலைப் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை மாவட்ட அளவில் பரப்புவதற்காக, மாவட்ட ஆட்சியர் தலைமையில் 13 உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மோட்டார் வாகனச் சட்டம், 1988, பிரிவு 215 (3)–இன் படி இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது, மேலும் இக்குழு ஒவ்வொரு மாதமும் கூட்டம் நடத்தி சாலைப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளை ஆய்வு செய்து தேவையான இடங்களில் தீர்வு நடவடிக்கைகளை வழங்க வேண்டும். மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுவின் முக்கிய நோக்கம் பின்வருவனவற்றை பகுப்பாய்வு செய்வது / மதிப்பாய்வு செய்வது ஆகும்.

I. மாவட்டங்களில் ஏற்படும் சாலை விபத்துகளை ஆய்வு செய்து விபத்துக்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து, அதற்கான தீர்வுகளை வழங்குதல்.

II. மற்ற பயன்பாட்டு துறைகள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அவற்றின் நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்.

III. சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகள் மற்றும் பிற இடையூறுகளை அகற்றி, போக்குவரத்து நெரிசல் இல்லாத வகையில், சாலை விபத்துகளை குறைத்தல்,

IV. அந்தந்த மாவட்டங்களில் சாலைப் பயனாளர்களிடையே சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வைப் பரப்புவதற்கான விரிவான திட்டத்தை உருவாக்குதல்.

V. தலைக்கவசம் மற்றும் இருக்கை பட்டை (Seat Belt) அணிவது போன்ற பல்வேறு சாலைப் பாதுகாப்பு பிரச்சாரங்களை மேற்கொள்வது.

சென்னை மாநகரத்தைப் பொருத்தவரை, சென்னை மாநகரில் உள்ள பல்வேறு சாலைப் பாதுகாப்புப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண சென்னை மாநகர காவல்துறை ஆணையர் தலைமையில் 18 உறுப்பினர்களைக் கொண்ட

சென்னை மாநகர மாவட்ட சாலைப் பாதுகாப்பு குழு ஒன்று தனியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அந்தந்த மாவட்டங்களில் உள்ள பல்வேறு சாலைப் பாதுகாப்புப் பிரச்சனைகள் குறித்து விவாதிக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் ஒவ்வொரு மாதமும் மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தை தொடர்ந்து கூட்டுவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவு சாலைப் பாதுகாப்பு ஆணையரால் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்பு குழு பிறப்பித்த உத்தரவுகளின் அடிப்படையில், சாலை விபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைக்க பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்த அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சாலை விபத்துகளைக் குறைக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, போக்குவரத்து ஆணையர் / சாலைப் பாதுகாப்பு

ஆணையரால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழு, அனைத்து மாநில அரசுகளின் காலாண்டு அறிக்கையைப் பெற்று, அனைத்து மாநில அரசுகளும் மேற்கொண்டுள்ள போக்குவரத்து விதிமீறல்கள் மற்றும் பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்து வருகிறது.

உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக்குழு, சாலை விபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைக்க பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்து வருகிறது. பல்வேறு போக்குவரத்து விதிகளை மீறுபவர்களின் ஓட்டுநர் உரிமங்களை தற்காலிக தடை அல்லது நிரந்தரத் தடை செய்வது குறித்து, ஒவ்வொரு காலாண்டிலும் உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்பு குழுவுக்கு அறிக்கை அனுப்பப்பட்டு வருகிறது.

உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழுவின் தலைவர் 27.02.2022 அன்று சென்னையில் சாலைப் பாதுகாப்பு குறித்த கூட்டத்தை இதர பயன்பாட்டுத்

துறைகளுடன் நடத்தினார். சாலை விபத்துகளைக் குறைக்க தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டிய அவர் இந்தியாவில், தமிழகம் சாலைப் பாதுகாப்பில் முன்னுதாரணமாக திகழ்வதாக கூறினார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட "இன்னுயிர் காப்போம் திட்டத்தினை" உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்பு குழுவின் தலைவர் அவர்கள் பாராட்டியுள்ளார்.

நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய வாகனங்கள் (Interceptor vehicle) மூலம் ஆய்வு மேற்கொண்டு, செயலாக்கப் பிரிவின் செயல்பாடுகளை மேம்படுத்த வேண்டும் என்றும், அவசர கால ஊர்தி செல்லும் கால தாமதத்தை குறைத்தல் மற்றும் கூடுதல் மருத்துவமனைகள் மூலம் சிறந்த பலனை எதிர்பார்க்கலாம் என்றும் உச்ச நீதிமன்றக் குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

**(ஆ) இன்னுயிர் காப்போம் திட்டம் (IKT)**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட "இன்னுயிர் காப்போம் திட்டம்" (IKT) என்ற திட்டத்தின் கீழ் தமிழகத்தில் பல்வேறு சாலைப்

பாதுகாப்பு முயற்சிகளை செயல்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம் சாலைப் பாதுகாப்பிற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால இலக்குகளை அடைய வழி வகுக்கும்.

**(i) சாலைப் பாதுகாப்பிற்கான சிறப்புப் பணிக்குழு**

அரசாணை (நிலை) எண்.146, உள் (போக்குவரத்து–V) துறை, நாள் 15.03.2022–ன் படி கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர், மாநில குற்ற ஆவண காப்பகத்தின் தலைமையில் நான்கு உறுப்பினர்களுடன் கூடிய சாலைப் பாதுகாப்பிற்கான சிறப்புப் பணிக்குழுவை அமைத்துள்ளது. சாலைப் பாதுகாப்பிற்கான சிறப்புப் பணிக்குழுவின் முக்கிய நோக்கம் பின்வருமாறு:–

1. சாலை விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளை குறைப்பதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வுகளை அடையாளம் காணுதல்

2. மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சாலை கட்டுமான நிறுவனங்கள் மூலம் குறுகிய

கால தீர்வுகளை செயல்படுத்துவதை கண்காணித்தல் மற்றும் அறிக்கை அளித்தல்.

3. தமிழ்நாடு சாலைப் பாதுகாப்பு ஆணையத்தை உருவாக்குவதற்கான அனைத்துத் தொடர்புடைய ஆயத்தப் பணிகளையும் நிறைவு செய்தல்.

சட்ட வரைவின் மூலம் "இன்னுயிர் காப்போம் திட்டத்தினை" (IKT) செயல்படுத்த, மாநிலத்தில் சாலைப் பாதுகாப்பு ஆணையம் (RSA) அமைப்பதற்கு வழிவகுக்கும் இடைக்கால அமைப்பாக சாலைப் பாதுகாப்பிற்கான சிறப்புப் பணிக்குழு செயல்படும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

**(ii) சாலைப் பாதுகாப்பு ஆணையம்**

சாலைப் பாதுகாப்பு ஆணையமானது அரசின் முதன்மைச் செயலர் நிலையில் உள்ள மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரியின் தலைமையில் செயல்படும். மேலும் காவல்துறைத் தலைவர் நிலையில் உள்ள காவல் அதிகாரி அல்லது கூடுதல்

காவல்துறைத் தலைவர் நிலையில் உள்ள காவல் அதிகாரியின் உதவியோடு இணைச் செயலர் நிலையில் உள்ள அதிகாரிகளைக் கொண்டு செயல்படும்.

### (iii) சீரான சாலைகள்

இன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் (IKT) 'சீரான சாலைகள்' அதாவது, சாலைகளில் நிகழும் விபத்து குறைப்பு (Fatality Accident Incident Reduction) (FAIR) திட்டம் ஏற்படுத்தப்பட்டு, சாலைக் கட்டமைப்புக்கான தீர்வு காணவும், விபத்தில்லா தமிழகத்தை அடைய அறிவியல் பூர்வமாகவும் மற்றும் புதுமையான செயல்திறனை உருவாக்கவும் முயற்சி மேற்கொள்ளப்படும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

சீரான சாலை திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் முன்முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகள் பின்வருமாறு:

அ. சாலைக் கட்டமைப்பு குறித்த தீர்வுகள்

ஆ. தரவுகளின் நம்பகத்தன்மை குறித்த தீர்வுகள்

இ. மக்களுக்கான சாலைப் பாதுகாப்பு குறித்த திட்டமிடல்

ஈ. செயலாக்கம் குறித்த தீர்வுகள்

உ. வாகனங்களின் கட்டமைப்பு மேம்பாடு குறித்த தீர்வுகள்.

**(iv) நம்மைக் காக்கும் 48**

சாலை விபத்தினால் நிகழும் இழப்புகளை குறைப்பதற்கும், அதனால் ஏற்படும் எதிர்பாராத மற்றும் செலவு செய்ய இயலாத குடும்பங்களின் மருத்துவ செலவினை குறைப்பதற்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் "நம்மைக் காக்கும் 48" என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

விபத்து நடந்த, முதல் 48 மணி நேர நெருக்கடியான நேரத்தில் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான மருத்துவ செலவினங்களுக்கான நிதியினை வழங்க உறுதி செய்யப்பட்டுள்ளது. இது சிகிச்சை மறுப்பு மற்றும் தேவையற்ற இடமாற்றங்கள் காரணமாக ஏற்படும் தாமதங்களை மேலும் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம் இறப்பு பெருமளவு குறைகிறது.

இத்திட்டத்தின் கீழ் நெடுஞ்சாலைகளில் அதிக விபத்து நடைபெறும் 500 இடங்களை கண்டறிந்து, அதற்கு அருகாமையில் தகுதி வாய்ந்த 640 மருத்துவமனைகள் (422 தனியார் மருத்துவமனைகள் மற்றும் 218 அரசு மருத்துவமனைகள்) கண்டறியப்பட்டு, உடனடியாக நோயாளிகள் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்படுகிறார்கள்.

மாவட்ட வாரியாக அவசர சிகிச்சை திட்டம் உருவாக்கப்பட்டு அங்கு அவசரகால ஊர்தி செல்லும் கால தாமதத்தைக் குறைக்கவும், உயிரிழப்புகளைத் தடுக்கவும் அருகிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் இணையதளம் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. பொன்னான நேரத்திற்குள் (Golden Hour) நோயாளி சரியான மையத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதை உறுதிப்படுத்த அவசர கால ஊர்திகளின் சேவை இணையதளம் மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

சாலை விபத்துக்களால் பாதிக்கப்பட்ட அனைத்து வகையான மக்களும் சிகிச்சை

மேற்கொள்வதற்காக, ஒரு நபருக்கு ரூபாய் ஒரு இலட்சம் வரை, தேர்ந்தெடுக்கப்பட்ட 81 அவசர சிகிச்சை முறைகளில் கட்டணமில்லா அடிப்படையில் சிகிச்சை வழங்கப்படுகிறது. இதற்கு உத்தரவாத முறையின் கீழ் ரூ. 50 கோடி மூலதன நிதி (Corpus fund) வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 18.12.2021 முதல் 27.04.2022 வரை சுமார் 52,936 பயனாளிகள் (அரசு மருத்துவமனையில் 47,036 நபர்களும், தனியார் மருத்துவமனையில் 5,900 நபர்களும்) பயனடைந்துள்ளனர்.

**(v) இன்னுயிர் காப்போம் – உதவி செய் திட்டம்**

சாலைப் பாதுகாப்பு தொடர்பான தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக 'இன்னுயிர் காப்போம் – உதவி செய் திட்டம்' என்ற புதிய திட்டம் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(இ) சாலைப் பாதுகாப்பு நிதி**

காவல்துறை மற்றும் போக்குவரத்துத் துறைகள் மூலம் வசூலிக்கப்படும் அபராதம் மற்றும் இணக்கக்

கட்டண வருவாயினைக் கொண்டு ஆண்டுதோறும் சாலைப் பாதுகாப்பு நிதிக்கு வரவு செலவு திட்டத்தில், அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. சாலைப் பாதுகாப்பு நிதியானது சாலைப் பாதுகாப்பு தொடர்பான பணிகள் / திட்டங்களுக்கு பிரத்தியேகமாக பயன்படுத்தப்படுகிறது. 2013–2014–ஆம் ஆண்டு முதல் 2021–2022–ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் சாலைப் பாதுகாப்பு நிதிக்கு அரசு ரூ.65.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

எந்தவொரு நிதியாண்டிலும் தடையில்லாமல், சாலைப் பாதுகாப்பு நிதியைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக காலாவதியாகாத சாலைப் பாதுகாப்பு நிதி ( Non lapsable Road Safety Fund) உருவாக்கப்பட்டுள்ளது.

**(ஈ) தமிழ்நாடு முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி**

அரசாணை (நிலை) எண். 1530, நாள் 03.07.1978 – ன்படி, சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்குவதற்காக, "முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி" என்ற பெயரில் ஒரு நிதியை அரசு உருவாக்கியுள்ளது. மாநிலத்தில்

இயங்கும் அனைத்து போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களினால் ஏற்படும் சாலை விபத்துகளில் மரணமடைந்த அல்லது காயமடைந்த நபர்களுக்கு இந்நிவாரண நிதி மூலம் இழப்பீடு வழங்கப்படுகிறது. சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களது குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரண நிதியளவின் விவரம் பின்வருமாறு:

### அட்டவணை– 6

| வ.எண். | விபத்தின் தன்மை | நிதி துவங்கப் பட்ட 1978–ம் ஆண்டில் வழங்கப்பட்ட நிவாரண அளவு (ரூபாயில்) | 24.02.2014 முதல் வழங்கப் படும் நிதி அளவு (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | இறப்பு | 1000 | 1,00,000 |
| 2. | நிரந்தர செயலிழப்பு | 800 | 50,000 |
| 3. | கொடுங்காயம் | 400 | 50,000 |
| 4. | ஒரு கண் (அ) ஒரு உறுப்பு அதாவது ஒரு கை (அ) ஒரு கால் இழப்பு | 400 | 30,000 |
| 5. | இதர சிறு காயங்கள் | 50 | 10,000 |

கடந்த ஆண்டுகளில் முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை பின்வருமாறு :–

அட்டவணை– 7

| வ.எண் | ஆண்டு | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | 2011–12 | 9.99 |
| 2. | 2012–13 | 10 |
| 3. | 2013–14 | 20 |
| 4. | 2014–15 | 40 |
| 5. | 2015–16 | 70 |
| 6. | 2016–17 | 50 |
| 7. | 2017–18 | 80 |
| 8. | 2018–19 | 80 |
| 9. | 2019–20 | 100 |
| 10. | 2020–21 | 100 |
| 11. | 2021–22 | 100 |

**(உ) சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு**

சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை சாலைப் பயனாளர்களிடையே ஏற்படுத்துவது சாலைப் பாதுகாப்பின் முதன்மைப் பணியாகும். மக்களிடையே

சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் சாலைப் பாதுகாப்பு வாரம் / மாதம் கொண்டாடப்படுகிறது. இது மற்ற பயன்பாட்டுத் துறைகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பிரபலங்கள் ஆகியோருடன் ஒருங்கிணைந்து கடைப்பிடிக்கப்படுவதால், பொதுமக்கள் மத்தியில் பெரிய அளவில் சென்றடைகிறது. இதற்காக அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பல்வேறு விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்ளவும் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இவை தவிர, சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுக்காக மாநிலத்திலுள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கும் தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.91 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

**(ஊ) சாலைப் பாதுகாப்பு மன்றங்கள்**

இளந்தலைமுறையினர் இடையே சாலைப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வண்ணம், அனைத்து கலை மற்றும் அறிவியல்

கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சாலைப் பாதுகாப்பு மன்றங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், அனைத்து சட்டக் கல்லூரிகள், சட்டத்துறையின் கீழ் செயல்படும் சட்டப் பல்கலைக்கழகங்கள், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் கீழ் வரும் கால்நடைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள், வேளாண்மைத் துறையின் கீழ் வரும் வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையின் கீழ் வரும் விளையாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள், தமிழ் வளர்ச்சித் துறையின் கீழ் வரும் இசைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் போன்ற கல்வி நிலையங்களில் சாலைப் பாதுகாப்பு மன்றங்கள் உருவாக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. தற்போது நமது மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சாலைப் பாதுகாப்பு மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

### (எ) ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவுத்தளம் (i – RAD)

2020 – ஆம் ஆண்டில் நடைபெற்ற 31வது சாலைப் பாதுகாப்பு வாரத்தின் போது, மத்திய தரைவழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவுத்தளம் (i–RAD) என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த திட்டம் இணையதள விபத்து பதிவு தரவுத் தளமாகும். இது தற்போதுள்ள கைபேசிகளில் பயன்படுத்தப்படும் i–OS மற்றும் Android ஆகிய இரண்டு இயங்கு தளங்களிலும் செயல்படும் கைபேசி செயலி ஆகும். இச்செயலி மத்திய தரைவழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு முறையே இந்திய தொழில்நுட்பக்கழகம் (IIT–M) மற்றும் மத்திய அரசின் தேசிய தகவல் மையத்தின் (NIC) மூலமாக தமிழகம் முழுவதும் நடைமுறைப்–படுத்தப்பட்டுள்ளது. போக்குவரத்து மற்றும் இதர பயன்பாட்டுத் துறைகளின் அனைத்து அலுவலர்களுக்கும் உரிய பயிற்சி அளிக்கப்பட்டு

சாலை விபத்துகள் தொடர்பான அனைத்து தரவுகளும் இந்த ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவுத்தளம் (i–RAD) தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

**(ஏ) மாவட்டங்களுக்கான சாலைப் பாதுகாப்பு முதல்வர் விருது**

சாலை விபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளை பெருமளவு குறைத்ததற்காக சிறந்த மூன்று மாவட்டங்கள் மற்றும் ஒரு காவல் ஆணையரகம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கப்பட்டு வருகிறது. தேர்வுக்கான முறைகளும் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், விருது பின்வரும் அளவீட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது:

அட்டவணை– 8

| சிறந்த மாவட்டம் (கேடயத்துடன்) | | |
|---|---|---|
| முதல் பரிசு | = | 25 இலட்சம் |
| இரண்டாம் பரிசு | = | 13 இலட்சம் |
| மூன்றாம் பரிசு | = | 10 இலட்சம் |
| காவல் ஆணையர் | | |
| ரூ.15 இலட்சம் (கேடயத்துடன்) | | |

**(ஐ) மனித உயிர்களைக் காத்தல்**

சாலை விபத்துகளின் போது மனித உயிர்களைக் காப்பாற்றுவதற்காக ஒவ்வொரு 50 கி.மீ. தூரத்திற்கும் மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் அவசரகால விபத்து நிவாரண மையங்கள் நிறுவப்பட்டன. இந்த மையத்தின் முக்கிய நோக்கம், சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முக்கியமான முதலுதவியை பொன்னான நேரத்திற்குள் அளிப்பதும், அருகிலுள்ள மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்கு ஏற்பாடு செய்வதும் ஆகும்.

தற்போது, நமது மாநிலத்தில் 1303 அவசர கால ஊர்திகள் செயல்பட்டு வருகின்றன. விபத்து நடந்த பொன்னான நேரத்திற்குள் (Golden hour) விலைமதிப்பற்ற மனித உயிர்களைக் காக்கும் பொருட்டு 108 அவசர கால ஊர்திகள் இயக்கப்பட்டு வருகின்றன.

சாலை விபத்தில் விபத்துக்குள்ளானவர்களின் உயிரைக் காக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் பொழுது ஏற்படும் இன்னல்களிலிருந்து கைம்மாறு

கருதாது உதவி செய்பவர்களை (Good Samaritans) பாதுகாப்பது அவசியம், எனவே கைம்மாறு கருதாது உதவி செய்பவர்களை (Good Samaritans) பாதுகாக்க மருத்துவமனைகள், காவல்துறை மற்றும் பிற அனைத்து அதிகாரிகளும் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டுதல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கைம்மாறு கருதாது உதவி செய்பவர்கள் (Good Samaritans) சாலையில் விபத்துக்குள்ளானவரைப் பற்றி காவல்துறை அல்லது அவசர சேவைகளுக்குத் தெரிவிக்க தொலைபேசி அழைப்பை மேற்கொண்டால், அவரது பெயர் அல்லது தனிப்பட்ட விவரங்கள் அல்லது தொலைபேசி எண்ணை வெளிப்படுத்த கட்டாயப்படுத்தப்பட மாட்டார்கள். மேலும், சாலை விபத்தில் சிக்கிய நபர்களை உடனடியாக, பொன்னான நேரத்திற்குள் (Golden hour) மருத்துவமனைக்கு கொண்டு வந்து அனுமதித்து, உயிரைக் காக்கக்கூடிய மனிதநேயப் பண்போடு பணியாற்றும் நல்ல உள்ளங்களை ஊக்குவிக்கும் வகையில் "நற்கருணை வீரன்" என்ற நற்சான்றிதழும், ரூ. 5 ஆயிரம் ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது.

## 15. சாலைப் பாதுகாப்பில் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் 2022

சாலைப் பாதுகாப்புத் திட்டத்தில் நிலையான வளர்ச்சி இலக்கு 2017–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. நிலையான வளர்ச்சி இலக்கு (SDG) 2015 ஆம் ஆண்டின் அடிப்படையில் 2020–ஆம் ஆண்டில் விபத்தினால் ஏற்படும் உயிரிழப்பை 50% குறைப்பதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. நிலையான வளர்ச்சி இலக்கு 3–ல் "ஆரோக்கியமான வாழ்விற்கான உடல்நலம் பேணுதல்", குறிக்கோள் 3.6–ல் "2020–ஆம் ஆண்டிற்குள், சாலை விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் காயங்களின் எண்ணிக்கையை பாதியாகக் குறைத்தல்" ஆகும்.

மாநிலத்தில் வாகனங்களின் எண்ணிக்கைக்கேற்ப, அனைத்து மாவட்டங்களுக்கும் ஆண்டு தோறும் திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கை அடைய தேவையான நடவடிக்கையை மேற்கொள்ள அனைத்து

பயன்பாட்டுத் துறைகள் மற்றும் அனைத்து மாவட்ட நிருவாகங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விபத்திற்குப் பிறகு தேவையான சிகிச்சை வழங்குதல், குடிபோதையிலும், தலைக்கவசம் மற்றும் இருக்கைப் பட்டை அணியாமலும், அதிக வேகத்துடனும், கைபேசி பேசிக்கொண்டும் வாகனம் ஓட்டுபவர்களுக்கு எதிரான சட்டங்களை அமல்படுத்துதல் போன்ற சிறந்த செயலாக்கப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் சாலை விபத்தினால் காயங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் "இன்னுயிர் காப்போம் திட்டம்" (IKT) என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 'நம்மைக் காக்கும் 48' (48 மணி நேரத்தில் உயிரைக் காப்பாற்றும்) திட்டத்தின் ஒரு பகுதியாக விபத்து நடந்த முதல் 48 மணி நேரம் இலவச அவசர சிகிச்சை அளிக்கப்படுகிறது. எனவே, "விபத்தில்லா தமிழ்நாடு"

என்ற இலக்கை அடைய அரசு பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## 16. முடிவுரை

நமது மாநிலத்தில் சாலை விபத்துகளைக் குறைக்க "இன்னுயிர் காப்போம் திட்டம்" மூலம் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது. ஒவ்வொரு மனித உயிரும் அந்தந்த குடும்பத்திற்கு மட்டுமல்ல, சமுதாயத்திற்கும் மதிப்புமிக்கது, மேலும், மாநிலத்தில் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு, மக்கள், "சாலைப் பாதுகாப்பை" ஒரு வாழ்க்கை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும். இத்துறை, பொதுமக்களுக்கு முழுமையாக கணினிமயமாக்கப்பட்ட சேவைகளை வழங்குகிறது. பொதுமக்களுக்கு ஆதாரை அடையாள ஆவணமாக பயன்படுத்தி நேரடி தொடர்பின்றி வட்டாரப் போக்குவரத்து அலுவலக சேவைகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீண்ட காலமாக வாகன உற்பத்தி மையமாக விளங்கும் தமிழ்நாடு

மாநிலம், மின்சார வாகன உற்பத்தி மற்றும் சுற்றுச்சூழலில் தன்னிறைவு கொண்ட மாநிலமாக மாறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மின்சார வாகனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் காற்று மாசுபாடு மற்றும் ஒலி மாசுபாடு இல்லாத சுற்றுப்புற சூழல் உருவாக்குவதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

**சா.சி. சிவசங்கர்**
போக்குவரத்துத்துறை அமைச்சர்

# பிற்சேர்க்கை – I

## போக்குவரத்துத் துறையின் கீழ் செயல்படும் அலுவலகங்களின் விவரம்

| வ. எண் | சரக அலுவலகம் | செயலாக்கம் | வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் | பகுதி அலுவலகம் | சோதனைச் சாவடி |
|---|---|---|---|---|---|
| 1. | இ.போ.வ. சென்னை (வடக்கு)<br><br>வ.போ.அ. –9<br>வ.போ.அ (செ) –1<br>ப.அ. –2<br>சோ.சா–5 | இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை | 1. சென்னை (கிழக்கு) | | |
| | | | 2. சென்னை (மையம்) | | |
| | | | 3. சென்னை (வடக்கு) | | |
| | | | 4. சென்னை (வடமேற்கு) | | |
| | | | 5. சென்னை (வடகிழக்கு) | | |
| | | | 6. திருவள்ளூர் | 1, திருத்தணி | 1. திருத்தணி |
| | | | | | 2.பாலவாக்கம் |
| | | | 7. செங்குன்றம் | 2, கும்மிடிப் பூண்டி | 3.பெத்திக்குப்பம் ( உள் வருகை)<br>4.பெத்திக்குப்பம் (வெளிசெல்லுகை) |
| | | | 8. பூந்தமல்லி | | 5.பூந்தமல்லி |
| | | | 9. அம்பத்தூர் | | |
| | | | 10.வ.போ.அ (செ) | | |

| வ. எண் | சரக அலுவலகம் | செயலாக்கம் | வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் | பகுதி அலுவலகம் | சோதனைச் சாவடி |
|---|---|---|---|---|---|
| 2. | இ.போ.ஆ சென்னை (தெற்கு) வ.போ.அ. –11 வ.போ.அ (செ)–1 ப.அ. –2 | இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை | 1. சென்னை (தெற்கு) | | |
| | | | 2. சென்னை (மேற்கு) | | |
| | | | 3. சென்னை (தென்மேற்கு) | | |
| | | | 4. சென்னை (தென்கிழக்கு) | | |
| | | | 5. மீனம்பாக்கம் | | |
| | | | 6. குன்றத்தூர் | | |
| | | | 7. தாம்பரம் | | |
| | | | 8. காஞ்சிபுரம் | | |
| | | | 9. செங்கல்பட்டு | 1.மதுராந்தகம் | |
| | | | | 2.திருக்கழுக்–குன்றம் | |
| | | | 10. சோழிங்க நல்லூர் | | |
| | | | 11. ஸ்ரீபெரும்–புதூர் | | |
| | | | 12. வ.போ.அ (செ) | | |

| வ. எண் | சரக அலுவலகம் | செயலாக்கம் | வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் | பகுதி அலுவலகம் | சோதனைச் சாவடி |
|---|---|---|---|---|---|
| 3. | விழுப்புரம்<br><br>வ.போ. அ. –8, வ.போ.அ. (செ)–1<br>ப.அ. –5<br>சோ.சா–1 | இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை | 1. விழுப்புரம் | | |
| | | | 2. உளுந்தூர் பேட்டை | | |
| | | | 3..கள்ளக்குறிச்சி | | |
| | | | 4. திண்டிவனம் | 1. செஞ்சி | 1.திருச்சிற்றம்–பலம் |
| | | | 5. கடலூர் | 2. பண்ருட்டி<br>3. நெய்வேலி | |
| | | | 6. திருவண்ணா–மலை | | |
| | | | 7. சிதம்பரம் | 4. விருத்தாச் - சலம் | |
| | | | 8. ஆரணி | 5. செய்யாறு | |
| | | | 9.வ.போ.அ (செ) | | |
| 4. | வேலூர்<br><br>வ.போ.அ. –6<br>வ.போ.அ (செ)–1<br>ப.அ. – 3<br>சோ.சா–6 | இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை | 1. வேலூர் | 1. குடியாத்தம் | 1.சேர்க்காடு |
| | | | | | 2.காட்பாடி |
| | | | 2.வாணியம்பாடி | 2. ஆம்பூர் | |
| | | | 3.திருப்பத்தூர் | | |
| | | | 4. ராணிப் பேட்டை | 3. அரக்கோணம் | |
| | | | 5. கிருஷ்ணகிரி | | 3.காளிக்கோயில் |
| | | | 6. ஓசூர் | | 4.ஓசூர் (உள் வருகை) |
| | | | | | 5.ஓசூர் (வெளிச் செல்லுதல்)<br>6.பாகலூர் |
| | | | 7.வ.போ.அ (செ) | | |

| வ. எண் | சரக அலுவலகம் | செயலாக்கம் | வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் | பகுதி அலுவலகம் | சோதனைச் சாவடி |
|---|---|---|---|---|---|
| 5. | சேலம்<br><br>வ.போ.அ. –7,<br>வ.போ.அ. (செ)–1<br>ப.அ. – 4 | இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை | 1. சேலம் (கிழக்கு) | | |
| | | | 2. சேலம் (மேற்கு) | 1. ஓமலூர் | |
| | | | 3. ஆத்தூர் | 2. வாழப்பாடி | |
| | | | 4. சேலம் (தெற்கு) | | |
| | | | 5. சங்ககிரி | | |
| | | | 6. தருமபுரி | 3. அரூர் | |
| | | | | 4. பாலக்கோடு | |
| | | | 7. மேட்டூர் | | |
| | | | 8.வ.போ.அ (செ) | | |
| 6. | ஈரோடு<br><br>வ.போ.அ. –8,<br>வ.போ. அ (செ)–1<br>ப.அ. –4<br>சோ.சா–1 | இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை | 1. ஈரோடு (கிழக்கு) | | |
| | | | 2. ஈரோடு (மேற்கு) | | |
| | | | 3. பெருந்துறை | | |
| | | | 4. கோபிச்செட்டி பாளையம் | 1. பவானி | 1.பண்ணாரி |
| | | | | 2.சத்தியமங்கலம் | |
| | | | 5. நாமக்கல் (வடக்கு) | 3.ராசிபுரம் | |
| | | | 6. நாமக்கல் (தெற்கு) | 4.பரமத்தி வேலூர் | |
| | | | 7. திருச்செங் – கோடு | | |

| வ. எண் | சரக அலுவலகம் | செயலாக்கம் | வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் | பகுதி அலுவலகம் | சோதனைச் சாவடி |
|---|---|---|---|---|---|
| | | | 8, குமார-பாளையம் | | |
| | | | 9.வ.போ.அ (செ) | | |
| 7. | கோயம்புத்தூர்<br>வ.போ.அ. -11<br>வ.போ.அ (செ)-1<br>ப.அ. -5<br>சோ.சா-6 | இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை | 1.கோயம்புத்தூர் (தெற்கு) | 1.சூலூர் | |
| | | | 2.கோயம்புத்தூர் (வடக்கு) | | |
| | | | 3.கோயம்புத்தூர் (மையம்) | | |
| | | | 4.கோயம்புத்தூர் (மேற்கு) | | 1.கே.ஜி. சாவடி (உள் வருகை)<br>2.கே.ஜி. சாவடி (வெளிச் செல்லுதல்) |
| | | | 5. திருப்பூர் (வடக்கு) | 2.அவினாசி | |
| | | | 6. திருப்பூர் (தெற்கு) | 3.காங்கேயம் | |
| | | | 7. தாராபுரம் | | |
| | | | 8.. பொள்ளாச்சி | 4.வால்பாறை | 3.கோபாலபுரம் |
| | | | | | 4.வலந்தயாமரம் |
| | | | 9. மேட்டுப் பாளையம் | | |
| | | | 10. ஊட்டி | 5.கூடலூர் | 5.தலைகுந்தா<br>6.கூடலூர் |
| | | | 11, உடுமலைப் பேட்டை | | |
| | | | 12.வ.போ.அ (செ) | | |

| வ. எண் | சரக அலுவலகம் | செயலாக்கம் | வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் | பகுதி அலுவலகம் | சோதனைச் சாவடி |
|---|---|---|---|---|---|
| 8. | தஞ்சாவூர்<br>வ.போ.அ. –6, வ.போ.அ. (செ)–1<br>ப.அ. – 7 | இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), ஸ்ரீரங்கம் | 1. தஞ்சாவூர் | 1. பட்டுக்–கோட்டை | |
| | | | 2. கும்பகோணம் | | |
| | | | 3. திருவாரூர் | 2.மன்னார்குடி | |
| | | | | 3.திருத்துறைப்–பூண்டி | |
| | | | 4. நாகப்பட்டினம் | | |
| | | | 5.மயிலாடுதுறை | 4.சீர்காழி | |
| | | | 6.புதுக்கோட்டை | 5.அறந்தாங்கி | |
| | | | | 6.இலுப்பூர் | |
| | | | | 7.ஆலங்குடி | |
| | | | 7.வ.போ.அ (செ) | | |
| 9. | திருச்சி<br>வ.போ.அ.–6, வ.போ.அ. (செ)–1<br>ப.அ. –8 | இணைப்போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), ஸ்ரீரங்கம் | 1. திருச்சி (மேற்கு) | 1.மணப்பாறை | |
| | | | 2. திருச்சி (கிழக்கு) | 2.திருவெறும்பூர் | |
| | | | 3. திருவரங்கம் | 3.துறையூர் | |
| | | | | 4.முசிறி | |
| | | | | 5.லால்குடி | |
| | | | 4. கரூர் | 6.குளித்தலை, | |
| | | | | 7.மண்மங்கலம் | |
| | | | | 8.அரவக்குறிச்சி | |
| | | | 5. பெரம்பலூர் | | |
| | | | 6. அரியலூர் | | |
| | | | 7. வ.போ.அ (செ) | | |

| வ. எண் | சரக அலுவலகம் | செயலாக்கம் | வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் | பகுதி அலுவலகம் | சோதனைச் சாவடி |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| 10. | மதுரை<br><br>வ.போ.அ. –6,<br>வ.போ.அ (செ)–1<br>ப.அ. –9<br>சோ.சா–1 | இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), ஸ்ரீரங்கம் | 1. மதுரை (வடக்கு) | 1.மேலூர் | |
| | | | | 2,வாடிப்பட்டி | |
| | | | 2. மதுரை (தெற்கு) | 3.திருமங்கலம், | |
| | | | | 4.உசிலம்பட்டி | |
| | | | 3. மதுரை (மையம்) | | |
| | | | 4. பெரியகுளம் | 5.உத்தம– பாளையம் | 1.லோயர் கேம்ப் |
| | | | 5. திண்டுக்கல் | 6.வேடச்சந்தூர் | |
| | | | | 7.வத்தல குண்டு | |
| | | | | 8.நத்தம் | |
| | | | 6. பழநி | 9.ஒட்டன்சத்திரம் | |
| | | | 7. வ.போ.அ. (செ) | | |
| 11. | விருதுநகர்<br><br>வ.போ.அ. –5,<br>வ.போ.அ (செ)–1<br>ப.அ. –3 | இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), ஸ்ரீரங்கம் | 1. விருதுநகர் | 1.அருப்புக்– கோட்டை | |
| | | | 2. சிவகங்கை | 2.காரைக்குடி | |
| | | | 3. ஸ்ரீவில்லிபுத்தூர் | | |
| | | | 4. ராமநாதபுரம் | 3.பரமக்குடி | |
| | | | 5. சிவகாசி | | |
| | | | 6. வ.போ.அ (செ) | | |

| வ. எண் | சரக அலுவலகம் | செயலாக்கம் | வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் | பகுதி அலுவலகம் | சோதனைச் சாவடி |
|---|---|---|---|---|---|
| 12. | திருநெல்வேலி வ.போ.அ. –8, ப.அ. –2 சோ.சா–2 | இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), ஸ்ரீரங்கம் | 1.திருநெல்வேலி | 1.வள்ளியூர் | |
| | | | | 2.அம்பா சமுத்திரம் | |
| | | | 2. தென்காசி | | 1.புளியரை |
| | | | 3. சங்கரன் கோயில் | | |
| | | | 4. தூத்துக்குடி | | |
| | | | 5.மார்த்தாண்டம் | | 2.களியக்கா– விளை |
| | | | 6. நாகர்கோவில் | | |
| | | | 7.திருச்செந்தூர் | | |
| | | | 8. கோவில்பட்டி | | |
| மொத்தம் 12 | | 2 | 91 | 54 | 22 |

## பிற்சேர்க்கை – II

## 31.03.2022 வரை போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் விவரங்கள்

| வ. எண் | பதவியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | போக்குவரத்து ஆணையர் | 1 |
| 2 | கூடுதல் போக்குவரத்து ஆணையர் | 1 |
| 3 | இணைப் போக்குவரத்து ஆணையர் | 6 |
| 4 | இணைப் போக்குவரத்து ஆணையர் (சாலைப் பாதுகாப்பு) | 1 |
| 5 | இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்) | 2 |
| 6 | துணைப் போக்குவரத்து ஆணையர் | 11 |
| 7 | தலைமை கணக்கு அலுவலர் | 1 |
| 8 | கணக்கு அலுவலர் | 1 |
| 9 | உதவி கணக்கு அலுவலர் | 12 |
| 10 | உதவி இயக்குநர் (புள்ளியியல்) | 1 |
| 11 | சட்ட அலுவலர் | 1 |
| 12 | உதவி இயக்குநர் (உள் தணிக்கை) | 1 |
| 13 | வட்டாரப் போக்குவரத்து அலுவலர் | 110 |
| 14 | சாலைப் பாதுகாப்பு வழிகாட்டு முகமை (துணை இயக்குநர்) | 5 |
| 15 | இயக்கூர்தி ஆய்வாளர் – நிலை – I | 238 |

| வ. எண் | பதவியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 16 | இயக்கூர்தி ஆய்வாளர் – நிலை – II | 181 |
| 17 | நேர்முக உதவியாளர் | 121 |
| 18 | மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாதது) | 82 |
| 19 | கண்காணிப்பாளர் | 248 |
| 20 | புள்ளியியல் ஆய்வாளர் | 2 |
| 21 | உதவியாளர் | 638 |
| 22 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 26 |
| 23 | இளநிலை உதவியாளர் | 426 |
| 24 | தட்டச்சர் | 184 |
| 25 | பரிசோதகர் | 1 |
| 26 | வாசிப்பாளர் (Reader) | 1 |
| 27 | காசாளர் | 14 |
| 28 | பதிவுறு எழுத்தர் | 154 |
| 29 | ஓட்டுநர் | 130 |
| 30 | அலுவலக உதவியாளர் | 364 |
| 31 | இரவுக் காவலர் | 158 |
| 32 | துப்புரவுப் பணியாளர் | 19 |
| 33 | ஓவியர் | 1 |
| மொத்தம் | | 3142 |

# பிற்சேர்க்கை – III


## வாகனங்களின் விவரம்

| நிதியாண்டு | போக்குவரத்து வாகனங்கள் | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | | மொத்த வாகனங்கள் | வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|---|
| | | இரு சக்கர வாகனங்கள் | பிற வாகனங்கள் | | |
| 2006-07 | 6,08,325 | 75,03,426 | 9,91,869 | 91,03,620 | 10.73 |
| 2007-08 | 7,06,869 | 82,60,019 | 11,02,122 | 1,00,69,010 | 10.60 |
| 2008-09 | 7,84,714 | 90,36,783 | 12,18,872 | 1,10,40,369 | 9.65 |
| 2009-10 | 8,33,948 | 99,69,598 | 13,53,415 | 1,21,56,961 | 10.11 |
| 2010-11 | 9,28,553 | 1,12,07,338 | 15,24,840 | 1,36,60,731 | 12.37 |
| 2011-12 | 10,01,025 | 1,26,59,928 | 17,07,672 | 1,53,68,625 | 12.50 |
| 2012-13 | 10,42,642 | 1,41,50,373 | 18,98,753 | 1,70,91,768 | 11.21 |
| 2013-14 | 11,34,446 | 1,55,95,140 | 20,77,919 | 1,88,07,505 | 10.04 |
| 2014-15 | 11,82,700 | 1,69,91,527 | 22,44,961 | 2,04,19,188 | 8.56 |

| நிதியாண்டு | போக்குவரத்து வாகனங்கள் | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | | மொத்த வாகனங்கள் | வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|---|
| | | இரு சக்கர வாகனங்கள் | பிற வாகனங்கள் | | |
| 2015-16 | 12,13,007 | 1,84,00,635 | 24,20,138 | 2,20,33,780 | 7.91 |
| 2016-17 | 12,34,360 | 1,99,87,302 | 26,23,402 | 2,38,45,064 | 8.22 |
| 2017-18 | 12,28,259 | 2,15,86,210 | 28,47,087 | 2,56,61,556 | 7.62 |
| 2018-19 | 12,64,623 | 2,33,46,216 | 30,77,346 | 2,76,88,185 | 7.90 |
| 2019-20 | 12,99,655 | 2,49,18,384 | 32,91,824 | 2,95,09,863 | 6.58 |
| 2020-21 | 13,13,661 | 2,61,45,113 | 34,86,042 | 3,09,44,816 | 4.86 |
| 2021-22 | 13,35,365 | 2,72,94,438 | 37,14,562 | 3,23,44,365 | 4,52 |


# பிற்சேர்க்கை – IV

## வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



## பிற்சேர்க்கை – V

## வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



## பிற்சேர்க்கை – VI

## 31.03.2022–ன்படி தமிழ்நாட்டில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை

| போக்குவரத்து வாகனங்கள் | | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | |
|---|---|---|---|
| பயணிப் பேருந்துகள் | | இரு சக்கர வாகனங்கள் | |
| மாநிலப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்து | 20,360 | மோட்டார் சைக்கிள் | 1,79,60,265 |
| தனியாரால் இயக்கப்படும் பயணிப் பேருந்து | 7,847 | ஸ்கூட்டர் | 37,25,776 |
| **மொத்தம்** | **28,207** | மொபெட் | 56,08,397 |
| **சிற்றுந்து** | **4,028** | **மொத்தம்** | **2,72,94,438** |
| **ஒப்பந்த வாகனங்கள்** | | மோட்டார் கார் | 31,06,229 |
| ஆட்டோ ரிக்ஷா | 3,04,888 | ஈப்பு | 46,232 |
| வாடகை சீருந்து | 4,331 | டிராக்டர் | 3,96,264 |
| சுற்றுலா சீருந்து (மாநில அனுமதி) | 1,07,979 | மூன்று சக்கர ஆட்டோ | 4,358 |
| சுற்றுலா சீருந்து (தேசிய அனுமதி) | 14,289 | மூன்று சக்கர வாகனம் | 63,266 |
| மேக்ஸி கேப் (மாநில அனுமதி) | 84,015 | ரோடு ரோலர் | 2,536 |
| மேக்ஸி கேப் (தேசிய அனுமதி) | 6,548 | இதர வாகனங்கள் முதலியன | 95,677 |
| ஆம்னி பேருந்து (மாநில அனுமதி) | 2,359 | | |

| போக்குவரத்து வாகனங்கள் | | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | |
|---|---|---|---|
| ஆம்னி பேருந்து (தேசிய அனுமதி) | 248 | | |
| **மொத்தம்** | **5,24,657** | | |
| **பிற இனங்கள்** | | | |
| தனியார் சேவை வாகனம் | 13,470 | | |
| கல்வி நிறுவன பேருந்து | 35,133 | | |
| அவசர கால ஊர்திகள் | 12,743 | | |
| தீயணைப்பு வாகனம் | 1,701 | | |
| **மொத்தம்** | ***63,047*** | | |
| **சரக்கு வாகனங்கள்** | | | |
| சுமையுந்து (மாநில அனுமதி) | 3,01,497 | | |
| சுமையுந்து (தேசிய அனுமதி) | 1,15,031 | | |
| உழுவை, இழுவை வண்டி | 78,063 | | |
| இலகு ரக வாகனம் | 2,06,574 | | |
| தொடர் வண்டி | 14,261 | | |
| **மொத்தம்** | *7,15,426* | | |
| போக்குவரத்து வாகனங்களின் மொத்த எண்ணிக்கை | **13,35,365** | போக்குவரத்து அல்லாத வாகனங்களின் மொத்த எண்ணிக்கை | **3,10,09,000** |
| **வாகனங்களின் மொத்த எண்ணிக்கை** | | | **3,23,44,365** |


## பிற்சேர்க்கை – VII

### வருவாய் வளர்ச்சி (ரூபாய் கோடியில்)

| வருவாய் ஆண்டு | ஆண்டு இலக்கு | மோட்டார் வாகன வரிகள் மற்றும் கட்டணங்கள் வசூல் செய்தது | வசூல் சதவிகிதம் | வளர்ச்சி விகிதம் |
|---|---|---|---|---|
| 2006-07 | 1254.16 | 1272.69 | 101.47 | 12.61 |
| 2007-08 | 1441 | 1494.58 | 103.71 | 17.43 |
| 2008-09 | 1726.34 | 1718.81 | 99.56 | 15.05 |
| 2009-10 | 1995 | 2034.24 | 101.97 | 18.35 |
| 2010-11 | 2397.68 | 2666.94 | 111.41 | 31.1 |
| 2011-12 | 3235.25 | 3108.95 | 96.1 | 16.57 |
| 2012-13 | 4191.43 | 3876.99 | 92.5 | 24.7 |
| 2013-14 | 4583.02 | 3677.52 | 80.24 | -5.14 |
| 2014-15 | 4279.53 | 3847.15 | 89.9 | 4.61 |
| 2015-16 | 4384.99 | 4234.24 | 96.56 | 10.06 |
| 2016-17 | 4733.07 | 4855.14 | 102.58 | 14.66 |
| 2017-18 | 5635.22 | 5362.91 | 95.17 | 10.46 |
| 2018-19 | 5918.82 | 5572.77 | 94.15 | 3.91 |
| 2019-20 | 6018.63 | 5674.54 | 94.28 | 1.83 |
| 2020-21 | 4566.46 | 4561.17 | 99.88 | -19.62 |
| 2021-22 | 5635.02 | 5626.80 | 99.85 | 23.36 |

**பிற்சேர்க்கை – VIII**


**வருவாய் வளர்ச்சி**



## பிற்சேர்க்கை –IX

## 2021–22–ஆம் ஆண்டின் தலைப்பு வாரியாக வருவாய் வசூல் விவரம்

**(ரூபாய் கோடியில்)**






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு விபத்து நடந்த முதல் 48 மணி நேர நெருக்கடியான நேரத்தில் மருத்துவ செலவினங்களுக்கான நிதியுதவி வழங்கும் "நம்மைக் காக்கும் 48" என்ற புதிய திட்டத்தை "இன்னுயிர் காப்போம் திட்டம்" - ன் கீழ் தொடங்கி வைத்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில் திருவண்ணாமலை மாவட்டம் செய்யாற்றில் ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன் கூடிய மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக (பகுதி அலுவலகம்) கட்டடத்தைத் திறந்து வைத்தார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12.04.2022 அன்று தலைமைச் செயலகத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு நேரில் வராமலேயே பழகுநர் ஓட்டுநர் உரிமம் பெறுதல், ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் ஓட்டுநர் உரிமத்தில் முகவரி மாற்றம் ஆகிய சேவைகளை இணையதளம் வாயிலாக பெறும் வசதியை தொடங்கி வைத்தார்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.